ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-7-2017) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

30. 2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

31. 2015-2016 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

*2017 ஜூலை 3*]

*84. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*85. மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017-2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*86. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)*

*87. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் ஆகியோரால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017-2018. (தமிழ்)*

-----

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS